[முற்பகல் 10.00]

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நிதி வசதி இல்லாததன் காரணமாக செய்யவில்லை என்று நான் நினைக்கிறேன். ஏற்கனவே அந்தப் பேரூராட்சி மன்றத்தில் இருந்த நிர்வாக அதிகாரி முறைகேடு செய்ததன் காரணமாக அந்தக் கட்டடம் தடைபட்டதாகவும், அது விரைவிலே கட்டி முடிக்கப்படும் என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே, 10, 12 ஆண்டுகள் ஆகியும் அப்படியே, அதே நிலையில் நிலைமட்டத்திலேயே இருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி, இந்த 80வது ஆண்டுக்குள்ளேயாவது அந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்வதோடு, அந்த முறைகேடு செய்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்காமல், கட்டிடம் இல்லாமல் குழந்தைகளைத் தண்டனைக்கு, அவஸ்தைக்கு உள்ளாக்குவது சரியாகாது. எனவே, உடனடியாக அந்தக் கட்டிடத்தை முடிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, 31-3-80 க்குள் கட்டி முடிக்கப்படும் என்று உறுதியாக நம்புகிறேன்.

ஏற்காட்டிலுள்ள தேயிலை, காப்பித் தோட்டத் தொழிலாளர் ஊதியம்.

*வினா எண். 96—திரு. க. அரங்கசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஏற்காட்டில் உள்ள தேயிலை, காப்பித் தோட்டத் தொழிலாளிகளுக்கு மற்றப் பகுதிகளில் உள்ள தேயிலை, காப்பி தோட்டத் தொழிலாளிகளுக்குத் தரப்படுவதுபோல் கூலி நிர்ணயம் செய்யாதது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) அரசுக்குத் தெரியும்.

(ஆ) 1975-ஆம் ஆண்டு அரசினரால் தோட்டத்தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக் குழு தன்னுடைய பரிந்துரையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியத்தை மாற்றி நிர்ணயம் செய்கையில் ஏற்காடு, சேர்வராயன் பகுதியில் உள்ள மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் மற்றப் பகுதி

1980 பிப்ரவரி 7]

காப்பி, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் உள்ள குறைந்த பட்ச ஊதிய வித்தியாசத்தை நீக்க வேண்டும் என தெரிவித்துள்ளது. அதன்படி 18-11-1976 ம் நாளிட்ட அரசு ஆணை எண். 1016இல் குறைந்த பட்ச ஊதியம் மறுமுறை திருத்தி அமைக்கப்பட்டது. பிறகு தொழிலாளர் நல ஆணையரின் 21-9-77ம் நாளிட்ட அறிவிக்கையில் பஞ்சப்படி வாழ்க்கைத் தர புள்ளிக்குத்தக்கவாறு அரசுஆணையில் கூறியபடி குறைக்காமல் கொடுக்க வேண்டும் என அறிவித்ததின் பேரில் சில மலைத் தோட்டத் தொழிலதிபர்கள் உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுவை தாக்கல் செய்தனர். உயர்நீதி மன்றம் தனது தீர்ப்பில் தொழிலாளர் நல ஆணையரின அறிவிக்கையை தள்ளுபடி செய்து அரசால் மாற்றி அமைக்கப்பட்ட ஊதிய விகிதங்கள் செல்லாது என தீர்ப்பளித்துவிட்டது.

2. எனவே ஊதிய விகிதங்களை மறுபடியும் மாற்றியமைத்து எல்லா காப்பி தேயிலைத் தோட்டப் பகுதிகளுக்கும் அது பொருந்தும்படி செய்வது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

அம்பத்தூர், வில்லிவாக்கம் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கல்.

*வினா எண். 97—திரு. க. சுப்பு : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அம்பத்தூர் நகரியப் பகுதிகளுக்கும் வில்லிவாக்கம் நகருக்கும் குடிநீர் வழங்குவதற்காக வகுக்கப்பட்ட 'குடத் தலையாறு திட்டம்' நிறைவேற்றப்படாமல் இருக்கக் காரணம் யாது?

(ஆ) அப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடுமையான குடிநீர் பஞ்சத்தைப் போக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) போதுமான நீர் ஆதாரம் கிடைக்காததால், திட்டம் நிறைவேற்றப்படவில்லை.

(ஆ) சென்னைப்பெருநகரில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு நிரந்தரமாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் அளிக்கும் குறிப்பு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்றல் வாரியத்தின் பரிசீலனையிலுள்ளது. இடைக் காலத்தில் சென்னை மாநகராட்சியைச் சார்ந்த வில்லிவாக்கம் பகுதியில் அதிக தட்டுப்பாடுள்ள இடங்களில் இரும்பு நீர்த் தொட்டிகள் வைக்கப்பட்டு லாரிகள் மூலம் நீர் நிரப்பப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நேரடியாகக் கூறியிருக்கிறேன். போதுமான அளவில் இரும்புத் தொட்டிகள் வைக்கப்பட